RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22236

OPEN ACCESS

# கார்காலம் சிறுகதைத் தொகுதியில் விளிம்பு நிலை மக்கள்

வே. நிஷா [அ], எஸ். அலக்ஸ் ஜேக்கப் [ஆ, *]

[அ] தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-627012), தொலையாவட்டம்-629157, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-627012,) மார்த்தாண்டம்-629165, தமிழ்நாடு, இந்தியா

# Marginalized People in a collection of short stories in Karkalam

V. Nisha [a, *], S. Alex Jacob [b]

[a] Department of Tamil, Annai Velankanni College, (Manonmaniam Sundaranar University, Tirunelveli), Tholaiyavattam-627012, Tamil Nadu, India

[b] Department of Tamil, Nesamony Memorial Christian College, (Manonmaniam Sundaranar University, Tirunelveli), Marthandam-627012, Tamil Nadu, India

* Corresponding Author: nishav@gmail.com

Received: 19-01-2022
Revised: 14-04-2022
Accepted: 23-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

Short story has a special place in today's literary world. Short stories show the quality of life of the people in the society. Su.Venugopal is one of the best writers who tells the quality of life of the lower class people through short stories. In his Karkalam collection of short stories, he has clearly recorded the condition of the people who are oppressed and living on the margins of the society. The short story collection showcases the marginalized people like the economically backward and abandoned. Economic crises make these people very depressed. The life struggles of people in such a marginal position have been going on for generations. Although the social and economic changes caused by scientific developments are reflected in the lives of these people, the marginal life remains a series of problems.

**Keywords:** Marginalized People, Economy, Poverty, Women

## முன்னுரை

காலத்திற்கேற்ற வடிவம் பரிணாமங்களைப் பெற்று வளர்ச்சியடைந்த இலக்கியங்கள் மொழிக்கு இலக்கணம் வகுத்ததோடு மக்களின் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துள்ளன. சமகால தமிழ் இலக்கிய உலகில் யதார்த்த வாழ்வியலைப் புனையும் படைப்பாளிகள் பெருமளவில் உள்ளனர். இத்தகு வாழ்வியல் கூறுகளைப் பதிவு செய்யும் உகந்த தளமாகக் காணப்படுபவை நவீன இலக்கியங்களே விளிம்பு நிலை எனப்பகுத்து வாழ்வியலைப் பதிவு செய்து இத்தகையோரின் மேம்பாட்டிற்காக வழி காட்ட முயற்சிப்பதாகவும் இந்த படைப்புகளை அடையாளப்படுத்தலாம். விளிம்பு நிலை மக்கள் தங்கள் வாழ்விலை மேம்படுத்த பல்வேறு வகையில் முயலுகின்றனர். இந்நிலையில் போரட்டம், துன்பம் போல பல அவமதிப்புகளை எதிர்க்கொள்கின்றனர் தேவைகளும் நிறைவேறுவதில்லை. விளிம்புநிலை மக்களின் பொருளாதார நிலை, பெண்களின் நிலை, தொழில் போன்றவற்றை படைப்பாளர் சு.வேணுகோபால் அவர்களின் கார்காலம் என்ற சிறுகதைத் தொகுப்பின் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

## விளிம்புநிலை மக்கள்

இயற்கையின் கூறாகிய மனிதனில் வேறுபாடுகளில்லை. மக்கள் தமக்கான உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் ஆகியவையே அடிப்படைத் தேவைகளாகக் கொண்டுள்ளனர். இவை நிறைவேறாமல் வாழுகின்ற மக்களே அடித்தட்டு மக்களாக மாறுகின்றனர். இத்தகையோரே விளிம்பு நிலை மக்கள். இவர்கள் சமூக, பொருளாதார முறையில் பின்தங்கியவார்களாவர் வருவாய் குன்றிய பல தொழில்களைச் செய்யும் மக்கள், புறக்கணிக்கப்பட்ட மக்கள் முதலியோர் விளிம்பு நிலை மக்கள் ஆவார். விளிம்பு நிலை என்பதற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.

"சமூகத்தின் பொதுவான போக்குகள், வாழ்க்கை முறைகள் போன்றவற்றிலிருந்து பெரும்பாலோரால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் நிலை" என்ற வரையறைகளைத் தருகிறது (Ramakrishnan 2020). விளிம்பு நிலையில் வாழும் மக்களை குறித்து ஆய்வு அறிஞர் அ.மார்க் அவர்கள்,

"விளிம்பு என்பது வர்க்க அடிப்படையிலான வரையறை அல்ல. அது சாதி, பால், அரசியல், பொருளாதாரம் எனப் பல்வேறு கூறுகளால் கீழ்நிலை படுத்தப்பட்ட சக்திகளைக் குறிப்பது ஆகும்". என்கிறார் (Marks & Velsamy, 2010). இவ்வாறு விளிம்பு நிலை மக்கள் எந்த நிலையில் முயன்றாலும், அவர்களால் உயர்ந்த நிலையில் உள்ளவர்களைப் போல சமமாக வாழ்க்கை நடத்த இயலாது என்பதை அறிந்து கொள்ளலாம்.

## பொருளாதார நிலை

மனித வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைவது பொருளாதாரம், குடும்பத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் ஆதாரமாக அமைவது பொருள் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொருளாதாரம் தேவைப்படுகிறது. விளிம்பு நிலையில் வாழும் மக்களுக்கு பொருளாதாரம் மிகுந்த மன உளைச்சலை உருவாக்குகிறது. நெகிழி எடுக்கும் தொழில் செய்யும் ஜெயராமனுக்கு வாடகைக்கு ஒரு கடை போடுவதற்கு கூட பொருளாதாரம் தடையாக இருக்கிறது. கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப் படுகிறான்.

"நாற்பதாயிரத்திற்குக் கடன் வாங்கினால் கூட மீதியைப் புரட்டிவிடலாம் வேறு யாரிடமும் வாங்க முடியவில்லை என்றால் மட்டும் தான் இவனிடமெல்லாம் பைனான்ஸ் வாங்க வேண்டும்". என்று ஜெயராமன் கூறுவதிலிருந்து ஜெயராமனின் பொருளாதாரப் பற்றாக்குறை அவரை கடனாளியாக மாற்றியமையை உணர முடிகிறது. பொருளாதாரத்தில் பின்தங்கிய நபர்களை குடும்பத்தார் கூட புறந்தாளிக்கும் நிலையினையும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார் (Venugopal, 2020).

"திடுக்கன்னு வந்து நின்னு இம்புட்டு தொகை கேட்டா நான் எங்க போறது"

"ஆனா இம்புட்டுக்கு எங்க போறது என கையாண்ட? தரப் பாக்குறேன்" இவ்வரிகள் ஜெயராமனின் வசதிபடைத்த சகோதரியின் மனநிலையைச் சுட்டுகிறது. நல்ல நிலையில் இருந்தும் தன் தம்பிக்கு உதவ மறுக்கும் நிலையை மேற்காண் வரிகள் புலப்படுத்துகின்றன (Venugopal, 2020).

'வாழ்விலே ஒருமுறை' என்ற கதையில் நடேசன் தனியார் வங்கியில் வேலை செய்கிறார். அவருக்கு ஒன்பது ஆண்டுகள் வேலை செய்தும் அவருக்கு ஊதியம் போதவில்லை குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்ற சில தவறுகளை செய்கிறான். நிறுவனருக்கு தெரியாமல் கையாடல்களை செய்கிறான்.

"கம்ப்யூட்டர் வாங்குனதில உள் கமிஷன் வச்சு வாங்கியிருக்கீங்க. ஒரு கம்ப்யூட்டருக்கு ஐயாயிரம் 24 கம்ப்யூட்டருக்கு ஒன்று ஃபிரியா கொடுத்ததையும் வாங்கும் கணக்கில் 25 ஆக மொத்தமா ஒரு லட்சத்து இருபத்தைதாயிரம் கமிஷனா வாங்கியிருக்கீங்க" (Venugopal, 2020) என்று நிறுவனர் நடேசனிடம் கேட்பதிலிருந்து அவனது குடும்பச் சூழலில் தான் நிறுவனத்தில் கையாடல் செய்யத் தூண்டுகிறது என்று தெளிவுறுகிறது. இதனால் அவருடைய வேலை பறிபோகும் நிலையில் தன் மனைவியிடம்,

"எல்லாம் போட்டி பொறாமை தான் நீ கொஞ்சம் நெருக்காம இருந்திருக்கக் கூடாதா" என்று கூறுவதிலிருந்து தன் பொருளாதார நிலை ஒரு மனிதனை நெருக்கடிக்குள்ளாக்கி தவறான நிலைக்கு அழைத்துச் செல்வதை அறிய முடிகிறது (Venugopal, 2020).

## வறுமை நிலை

பொருளாதாரக் குறைவால் தான் வறுமை வருகிறது. வாழ்க்கையில் ஏதோ ஒரு கட்டத்தில் பெரும்பாலானோரை அந்த அனுபவம் நெருங்குகிறது. வறுமையால் வரும் சிக்கல்கள் உலகத்திலுள்ள பெரும்பாலான குடும்பங்களில் நடைமுறைகளில் இருக்கக் கூடியது தான். இவை எல்லாவற்றிக்கும் முழுமையான காரணம் பணம் மட்டுமே இன்று இருக்கும் நிலையில் பொருளாதாரம் இல்லாமல் மனித இனத்தால் வாழ முடியாது. கார்காலம் சிறுகதையில் ஜெயராமன் தனக்கு தன் குடும்பத்திற்காக தனக்கு தெரிந்த ஒரே தொழிலை செய்து பின் கடன் வாங்கி கரை போடலாம் என்று நினைக்கிறான்.

"மொத மொத நானும் கடன் வாங்கித் தான் கடை போடுறேன். சூடு பிடிச்சா தான் ஆச்சு. எம் மகளுக்காகத்தான் இந்த பாடுபடுகிறேன்." ஜெயராமனின் வறுமை நிலை அவனை கடன் வாங்கும் நிலைக்கு தள்ளுகிறது (Venugopal, 2020). அதுமட்டுமல்ல வறுமை நிலையில் உள்ள ஒரு குடும்பத்தின் குழந்தை படிப்பும் தடையாக உள்ளது என குறிப்பிடுகிறது. 'சொல்ல முடிந்தது' என்ற சிறுகதை, ரகுராம் சிறுவயதில் பள்ளிக்கூடத்திற்கு வரைவியல் பெட்டி வாங்குவதற்கு பணம் இல்லாததினால் ஆசிரியர் வாங்கி வருவதற்கு கட்டாயப் படுத்துவதினால் அவனால் பள்ளிக்கூடத்திற்கு செல்லமுடியவில்லை.

"படிப்பை விட்டு ஒடாமல் இருந்திருந்தால் நல்ல நிலைக்கு வந்திருக்கலாம். புள்ளியில் ஜாமட்றிபாக்ஸ் இல்லாமல் வகுப்புக்கு வராதே பரிச்சை ஒசி கேட்டிட்டிருப்பியா"

"வீட்டுக்கு வந்ததும் வராததுமாக பத்துநாள் முன்னேயே சொன்னேனில்லே. இனி நான் ஸ்கூலுக்கு போக மாட்டேன்." என்பதிலிருந்து வறுமை நிலை படிப்புக்கு தடையாக மாறுகிறது என்பதை காணலாம் (Venugopal, 2020).

## பெண்களின் நிலை

உலக உயிர்களின் ஆதாரமாக விளங்குவது பெண். பெண்ணானவள் தன் வலிமையை குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் பயன்படும் வகையில் தன்னை பயன்படுத்திக் கொள்கிறாள். விளிம்பு நிலையில் பெண்களை ஒரு பகுதியாக வைத்து நோக்கும் போது, பெண்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாக்கப் படுகிறாள். விளிம்பு நிலையில் வாழும் வரதம்மாள் தனது மகனைப் படிக்க வைக்கப் பெரும்பாடு படுகிறாள். கணவனை இழந்த அவள் தன் மகனுக்கு உணவு வழங்கவும் குடும்பத்தை நடத்திச் செல்லவும் இயலாமல் தவிப்பதை,

"அந்த பார்வையில் எப்போதும் வருத்தம் தான் வெளிப்படும் நாலு காசு பார்த்து பிள்ளைகளைப் படிக்க வைத்து விட்டான் என்றால் போதும் என்பது போல் பார்த்தால்." என்றும் வரிகள் பதிவு செய்துள்ளன (Venugopal, 2020). இதிலிருந்து அவளின் அவலநிலை வெளிப்படுகிறது. அதே போல் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆனாலும் தள்ளாத வயதிலும் அவள் வேலைக்கு செல்கிறாள்.

'வேலைக்கெல்லாம் போகாதம்மா போதும் நீ உழைச்சது' என்று சொன்னாலும் கேட்பதில்லை. என்று மகனே கூறினாலும் அவள் வேலை செய்வதை நிறுத்தவில்லை (Venugopal, 2020).

'வாழ்விலே ஒரு முறை' கதையில் வரும் சாந்தா தன் கணவனின் வருமானத்திற்கு தக்க செலவினங்களைப் பார்க்காமல் தன் தேவைக்கு அவனை வற்புறுத்துகிறாள்.

"முத்து உதிர்ந்து சப்பட்டையாகிப் போன கொலுசுகளை மாற்றி, புதிய கொலுசும் பெரியவள் சின்னவள் இரண்டு பேருக்கும் இரண்டிரண்டு பவுனில் செயினும் இரு சிறு மோதிரங்களும் எடுக்க வேண்டும் என்று நாலைத்து மாசமாக தூண்டிக் கொண்டே இருந்தாள்." என்பதிலிருந்து விளிம்பு

நிலையில் இருக்கும் பெண்கள் தங்கள் நிலையை உயர்த்த முற்படுகின்றனர் என்பதும் பல சமயங்களில் அது இயலாமல் போகும் நிலையும் புலனாகிறது (Venugopal, 2020).

## முடிவுரை

சங்க இலக்கியங்கள் துவங்கி இன்றைய நவீன இலக்கியங்கள் வரையிலும் விளிம்பு நிலையினைக் குறித்து பதிவு செய்துள்ளன. இத்தகையோரின் சமூக, பொருளாதார, அறிவியல், வாழ்வியல் உள்ளிட்ட அனைத்துமே பின்தங்கிய நிலையிலிருந்து கார்காலம் சிறுகதையானது இனம், தொழில், பொருளாதாரம் என சமூக எல்லைக்கு வெளியில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் நிலைகளை எடுத்துரைக்கிறது. பிறப்பால் விளிம்பு நிலையில் வாழும் மக்களை விட பொருளாதாரப் பற்றாக்குறையால் பலர் அடித்தள மக்களாக உருவாகும் நிலையையும் இச்சிறுகதைத் தொகுப்பின் வழி அறியமுடிகிறது.

## References

Marks, A., Velsamy, P. (2010) Marginal Studies and Tamil Narratives, Field Publication, Madurai, India

Ramakrishnan, S. (2020) Contemporary Tamil Dictionary of Kriya, Kriya Publication, Chennai, India.

Venugopal, S. (2020) Karkalam, Tamilini Publishing House, 63, Nachiyammai Nagar, Selavayal, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License